# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109435

1\. District : மாவட்டம் ஈரோடு  PS: காவல்நிலையம் V & AC  Year: ஆண்டு 2023  FIR No. மு.த.அ. எண் 08/AC/2023  நாள் 31.10.2023 10.00 Am

2\. (i) Act சட்டம்: PC Act 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3\. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 20.10.2023  Date to : நாள் வரை 30.10.2023 at 18:15 Hrs

Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.10.2023  Time : நேரம் 0800 Am

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol-IV 31.10.2023  Time : நேரம் 0800 Am

4\. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து பூர்வமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5\. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ மேற்கு.

Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (கி.வ), TANGEDCO, வீரப்பன்சத்திரம், திருநகர் காலனி, ஈரோடு.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6\. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. சண்முகசுந்தரம்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஸ்ரீனிவாசன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53/2023  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் சுயதொழில்  (g) Address : முகவரி எண். 5, மகிழ்ச்சிநகர், வில்லரசம்பட்டி அஞ்சல், ஈரோடு.

7\. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. சண்முகம், உதவி செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (கி.வ), TANGEDCO, வீரப்பன்சத்திரம், திருநகர் காலனி, ஈரோடு.
2. திரு. சிவக்குமார், உதவி மின்பொறியாளர், உதவி மின்பொறியாளர் அலுவலகம் (கி.வ), [illegible], வீரப்பன்சத்திரம், ஈரோடு.

8\. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணித்தசமளிக்கப்பட்டுகிறது:

— தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. [signature] 31/10/2023 [signature] 31/10/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

31.10.2023 @ 1130 AM.

Name: பெயர் G. ஜான்மேகம்
Rank: நிலை காவல் ஆய்வாளர்.....
அ.ம.க.ப.மகி, ஈரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 8/AC/2023 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் 31.10.2023 தேதி காலை 08.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.S.சண்முகசுந்தரம் வயது 53, த/பெ சீனிவாசன், எண்.5 மகிழ்ச்சி நகர், வில்லரசம்பட்டி அஞ்சல், ஈரோடு-638 107 என்பவர் நிலையம் ஆஜராகி கணணியால் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து பூர்வமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புனர் S.சண்முகசுந்தரம் வயது 53, த/பெ சீனிவாசன், எண்.5 மகிழ்ச்சிநகர், வில்லரசம்பட்டி அஞ்சல், ஈரோடு-638 107 பெறுநர் இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. ஐயா, நான் ஈரோடு வில்லரம்பட்டி, மகிழ்ச்சிநகரில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு சுமார் 2½ ஏக்கர் நிலம் ஈரோடு பெரியசேமூர் ராசம்பாளையம் ரோடு, SSP நகரில் உள்ளது. அதில் குடோன்கள் கட்டி வாடகைக்விட்டு வருகிறேன். அதில் க.எண்.112-A உள்ள குடோனை, நானும் என் மனைவியும் செய்து கொண்ட வாடகை ஒப்பந்தத்தின்படி எனது மனைவி திருமதி.சண்முகவள்ளி பெயரில் 10-HP திறன் கொண்ட மானியத்துடன் கூடிய மின் இணைப்பு பெறப்பட்டது. அந்த குடோனை கொங்கு பாலிமர்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.மதன்குமார் என்பவருக்கு ரூ.15,000/- மாதவாடகைக்கு கொடுத்தோம். அவருக்கு குடோனில் உள்ள10-HP மின் இணைப்பு போதாது என்றும், மொத்தம் 80-HP மின்திறன் கொண்ட மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால், எனக்கு 70-HP மின் திறன் கூடுதலாக தேவைப்பட்டது. எனவே நான் 20.10.2023 அன்று ஈரோடு, மாணிக்கம்பாளையம், EBB நகரில் உள்ள வீரப்பன்சத்திரம் உதவி மின்பொறியாளர் அலுவலகம் சென்று இது பற்றி விசாரித்த போது, AE திரு.சிவக்குமார் மற்றும் CI திரு.முருகானந்தம் ஆகியோர்கள் என்னிடம் எனது மனைவி சண்முகவள்ளி பெயரில் உள்ள மின் இணைப்பானது மானியத்தில் உள்ள மின் இணைப்பு என்றும், எனவே முதலில் இந்த 10-HP கொண்ட மானியமின் டேரிப்பை ரத்து செய்யவேண்டும் என்றும், பின்புதான் உங்களுக்கு கூடுதலாக 70-HP சேர்த்து 80-HP மின்திறன் கொடுக்க முடியும் என்று சொல்லி மானிய டேரிப்பை ரத்து செய்ய ஒரு விண்ணப்பம் தரச்சொன்னார்கள். அதன்படி நான் என் மனைவியிடம் ஒரு விண்ணப்பத்தில் கையொப்பம் பெற்று அதற்கான ஆவணங்களை இணைத்து அன்றைய தினமே AE அலுவலகம் சென்று விண்ணப்பம் கொடுத்தேன். அன்றே CI திரு.முருகானந்தம் மற்றும் AE திரு.சிவக்குமார் ஆகியோர்கள் எனது குடோனை பார்வையிட வருவதாக சொன்னார்கள். முருகானந்தம் அவர்களை நான் என்னுடன் அழைத்து சென்றேன். அங்கு எனது குடோனை பார்வையிட்ட முருகானந்தம் அவர் தான் அனைத்து வேலைகளையும் செய்து AE

அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும், அதற்கு தனக்கு தனியாக 20,000/- ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும், அவர் அவருடைய வேலையை முடித்துவிடுவதாகவும் சொன்னார். நீங்கள் மற்ற அதிகாரிகளை பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் என்னிடம் சொன்னார். நான் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன். சிறிது நேரம் கழித்து AE திரு.சிவக்குமார் அவர்கள் எனது குடோனுக்கு வந்து எங்களுடன் பார்வையிட்டு சென்றுவிட்டார். பின்னர் அன்றே கூடுதலாக 70-HP சேர்த்து மொத்தம் 80-HP மின்திறன் வேண்டி என் மனைவியிடம் விண்ணப்பத்தில் கையொப்பம் பெற்று உரிய ஆவணங்களுடன் AE அவர்களிடம் கொடுத்தேன். எனது விண்ணபத்தை பெற்றுக்கொண்டு, அதை அவர்களே Online-ல் பதிவு செய்து விடுவதாக கூறினார். அதன் பின்னர் நான் தொடர்ந்து AE அலுவலகம் சென்று AE மற்றும் CI ஆகியோர்களை சந்தித்து பேசிவந்தேன். ஒவ்வொரு முறையும் CI அவர்களை பார்க்கும்போது என்னிடம் அவர் கேட்டபணம் ரூ.20,000/-ஐ ஞாபகபடுத்தினார். ஆனால் நான் வேலை முடியட்டும் என்று சொல்லி அவருக்கு பணம் கொடுக்கவில்லை. 25.10.2023 தேதி நான் AE சிவக்குமார் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது கூடுதல் மின்பளு தேவை சம்மந்தமாக கேட்டபோது அவர் AD சண்முகம் அவர்களும் உங்கள் குடோன் அமைந்துள்ள இடத்திற்கு வந்து பார்த்துவிட்டு சென்றுவிட்டார் என்ற விபரத்தை என்னிடம் சொல்லி சீக்கிரம் ரெடியாகிவிடும் என்று சொன்னார். அதன் பின்னர் 26.10.2023-ம் தேதி காலையில் சுமார் 9.30 மணியளவில் AE அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது விண்ணபம் பற்றி கேட்டபோது, அவர் CI-க்கு உதவியாக பணிபுரிந்த தமிழரசன் என்பவரை அழைத்து, ஏன் இன்னும் இவரது கோப்பை அனுப்பவில்லை என்று கேட்டார். அதற்கு அவர் CI வெயிட்பண்ண சொன்னதாக சொன்னார். அதற்கு AE நான் பார்த்துக்கொள்கிறேன், சீக்கிரம் கோப்பினை தயார் செய்து கொடுக்க வேண்டும் என்று உத்திரவிட்டார். அதன் பின்பு அடுத்தநாள் வரும்படி அனுப்பிவைத்தார். அதன்படி 27.10.2023 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு AE அலுவலகம் சென்று அவரைப்பார்த்தபோது AE அவர்கள் என்னிடம் எனது விண்ணபத்தினை Online ல் அப்லோடு செய்து விட்டதாக கூறி நான்குபக்கம் கொண்ட பிரின்ட்அவுட்டை என்னிடம் கொடுத்து அதில் எனது மனைவியின் கையொப்பம் பெற்று வரச்சொன்னார். நானும் அவ்வாறு கையொப்பம் பெற்று வந்து கொடுத்தேன். எனது விண்ணப்பத்திற்கு பணம் கட்டிவருமாறு சொன்னத்தின் பேரில் நானும் ரூ.1,59,615/- ஐ Online மூலம் எனது விண்ணப்ப எண் 2000401010231335 தேதி 27.10.2023 TANGEDCO-விற்கு பணம் கட்டினேன். அதற்கான இரசீது எண் PGCCAN 575792077 ஆக எனது போனிற்கு SMS வந்தது. அதன் விபரத்தை AE அலுவலகம் சென்று AE அவர்களிடம் தெரிவித்தேன். அப்போது AE அவர்களும் அவரது அலுவலகத்தில் இருந்த எனது விண்ணப்ப கோப்பை பார்த்து விட்டு, அதில் கையொப்பம் செய்தார். AE அவர்கள் என்னிடம் எனது விண்ணப்பத்திற்கு AD அவர்கள் தான் சேங்சன் கொடுக்கவேண்டும் என்றும், எனவே அவரை பார்க்கவேண்டும் என்று சொன்னார். பின்னர் அன்று மாலை 3 மணிக்கு அவர் என்னை

போனில் தொடர்பு கொண்டு AD அவர்களை எப்பொழுது பார்க்க முடியும் என்று தெரிவிக்கிறேன் என்றும் கூறினார். அதன்படி நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். AE சிவக்குமார் அவர்கள் சொன்னபடி 3 மணிக்கு என்னை அழைக்காததால், நான் அவரை மாலை சுமார் 3.15 மணியளவில் அவரது செல்போன் எண். 8610701087-க்கு எனது செல்போன் எண். 9442000555 லிருந்து தொடர்பு கொண்டபோது, என்னை கருங்கல்பாளையம் திருநகர் காலனியில் உள்ள AD ஆபீஸ்சுக்கு வரச்சொன்னார். அதன்படி நானும் வீட்டிலிருந்து புறப்பட்டு AD ஆபீஸிற்கு சென்றேன். அங்கு AE அவர்கள் எனக்காக காத்திருந்தார். அப்போது அவர் AD அவர்களிடம் நான் கூடுதல் மின்சாரம் கேட்டு விண்ணப்பம் செய்திருப்பது சம்மந்தமாக பேசியிருப்பதாகவும் கூறி AD திரு.சண்முகம் அவர்களை பார்க்கவேண்டும் என சொன்னார். நானும் AD திரு.சண்முகம் அவர்களை மாலை சுமார் 3.50 மணிக்கு AE சிவக்குமார் அவர்களுடன் சென்று பார்த்தேன். அப்போது AD அவர்கள் என்னிடம் எனக்கு தேவையான கூடுதல் மின் பளு பற்றி கேட்டுவிட்டு, அதற்கு தனக்கு தனியாக ரூ.25,000/- கொடுத்து விடுங்கள் என்றும் DE அவர்கள் சென்னை சென்றுள்ளதாகவும், அவரிடமும் கேட்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டு, அவர் என்னிடம் கட்டணம் எல்லாம் செலுத்தி பதிவு செய்து விட்டீர்கள், எஸ்டிமேசன் தயார் செய்து அதற்கு சேங்சன் நான் தான் கொடுக்க வேண்டும் என்றும், தான் கேட்ட பணத்தை கொடுத்துவிடுங்கள் இரண்டு நாட்களில் சேங்சன் கொடுத்து விடுவதாகவும் சொன்னார். மேலும் DE வரும் திங்கட்கிழமை அலுவலகத்திற்கு வருவார், அவரிடமும் கேட்டுவிட்டு திங்கட்கிழமை சொல்வதாகவும் அதன்படி பணத்தை கொடுத்து விடுங்கள் என்றும் சொன்னார். நானும் அதற்கு ஒப்புக்கொண்டு மீண்டும் வரும் திங்கட்கிழமை வருதாக சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். அதன்படி நான் நேற்று 30.10.2023-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் மாணிக்கம்பாளையம், EBB நகரில் உள்ள வீரப்பன்சத்திரம் உதவி மின்பொறியாளர் அலுவலகம் சென்று AE சிவக்குமார் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் AD அவர்களை போனில் தொடர்புகொண்டு பேசிவிட்டு, என்னிடம் AD அவர்கள் சொந்தவேலையாக வெளியில் இருப்பதாகவும், AD மதியத்திற்கு மேல் தான் வருவார் என்றும், அவர் வந்தவுடன் கூப்பிடுவதாக தெரிவித்து அனுப்பிவைத்தார். பிறகு அன்று மதியம் சுமார் 2.30 மணியளவில் AE சிவக்குமார் அவர்கள் என்னை போனில் தொடர்பு கொண்டு AD அவர்கள் எல்லாத்தையும் என்னையே பார்த்து கொள்ள சொல்லிவிட்டார் என்றும், மாலை 3.30 மணிக்கு தனது அலுவலகத்திற்கு நேரில் வரும்படியும் சொன்னார். நான் வெளியில் இருப்பதாக சென்னவுடன் வீட்டிற்கு வந்துவிட்டு கூப்பிடுங்கள் என்று சொன்னார். பின்னர் மாலை 6.15 மணியளவில் நான் AE சிவக்குமார் அவர்களை போனில் தொடர்பு கொண்டு வீட்டிற்கு வந்த விபரத்தை சொன்னேன். அப்போது அவர் என்னிடம் AD அவர்கள் DE அவர்களிடம் பேசிவிட்டதாகவும் ஆகையால் AD அவர்களுக்கு ரூ.25,000/-மும், DE அவர்களுக்கு ரூ.25,000/-மும் மொத்தம் ரூ.50,000/-ஐ நாளை மதியம் கொண்டு வந்து தன்னிடம் கொடுத்துவிடுங்கள் சீக்கிரமாக நீங்கள் கேட்ட கூடுதல் மின் பளு வழங்க நடவடிக்கை

எடுப்பதாக தெரிவித்தார். பிறகு நான் யோசித்து பார்த்ததில், என் மனைவியின் பெயரில் மொத்தம் 80-HP திறன் கொண்ட மின் இணைப்பு பெறுவதற்கு, AD திரு.சண்முகம் அவர்களுக்கும், DE அவர்களுக்கும், AE திரு.சிவக்குமார் மூலம் லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே AD திரு.சண்முகம் மற்றும் AE சிவக்குமார் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, XXXX (S.சண்முகசுந்தரம்) ஈரோடு 31.10.2023.

Sir, Received the above said computer tamil typed complaint on 31.10.2023 at 08.00 hrs. Sd/- (xxxxxxxx) 31.10.2023 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, Chennai I am registering a case in Erode, Vigilance and Anti-Corruption Cr.No.08/AC/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 against the accused Tr.Shanmugam, Assistant Executive Engineer/AD, Erode and Tr.Sivakumar, Assistant Engineer Erode today on 31.10.2023 at 10.00 hrs Sd/- (xxxxxxxx) 31.10.2023 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.S.Shanmugasundaram age 53, s/o Srinivasan, No.5 Mahilchi nagar, Villarasampatty post, Erode-638 107 is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

31/10/2023

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.